1971 டிசம்பர் 13]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்சமயம் இல்லை. ஆனால் வட ஆற்காடு மாவட்டத்தில் தென்னை தீவிர சாகுபடித் திட்டம் பற்றிப் பதில் சொன்னேன். இந்தத் தென்னை தீவிர சாகுபடித் திட்டம் 1963-64. 1965-66-ல் தஞ்சை மாவட்டத்தில் அதிகாரம்புட்டினத்தில் செயல்படுத்தப்பட்டது. 1966-67, 1968-69-ல் வட ஆற்காடு மாவட்டத்தில் குடியாத்தம் பகுதியிலும், தஞ்சை மாவட்டத்தில் குருவிகொம்பை பகுதியிலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒரு பகுதியிலும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு தற்சமயம் வட ஆற்காடு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்களுடைய கேள்வி இராமநாதபுரத்தில் இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப் படுமா என்பதுதான். அதற்குப் பதில் சொன்னால் போதும். திரு. ஏ. எம். இராஜா . . .

திரு. ஏ. எம். இராஜா : அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சியில் தென்னை சாகுபடி செய்யத்திட்டம் ஏற்படுத்தியிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். தென்னையில் புதிய ஹைபிரிட் வெரைட்டிஸ் கண்டுபிடித்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் அதற்கு முயற்சி எடுத்திருக்கிறார்களா? அப்படி எடுத்துக் கொண்டிருந்தால், இப்போது ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ஹைபிரிட் கன்றுகளை அரசு உற்பத்தி செய்கிறது? அதை விவசாயிகளுக்கு எந்த முறையில் பகிர்ந்து கொடுக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தனியாக கேள்வி போடவும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தென்னை பயிரிட பாலாறு படுகை முழுவதும் சிறந்த ஏற்ற இடமாக இருக்கிறது என்று சொல்லப் படுகிறது. பாலாறு படுகையைச் சுற்றி அரசாங்கம் தென்னைப் பயிர் வைக்க முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்சமயம் இல்லை.

திரு. கோவை செழியன் : இந்தத் தென்னை சாகுபடி செய்கிற இடங்களிலும், மற்ற இடங்களிலும், குறிப்பாக கோவை மாவட்டத்தில் இதற்கு ஒருவித சோகை நோய் ஏற்பட்டு மருந்து எதுவும் போடப்பட்டதாகக் காணவில்லை. அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போது துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படும்.

பூச்சி மருந்துகள் இலவசமாகத் தெளித்தல்

*335 வினா—**திரு. ந. நாச்சியப்பன்** : மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இம்மாநிலத்தில் பயிர்களுக்குப் பூச்சி மருந்து இலவசமாக தெளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இம்மாநிலத்தில் பயிர்களுக்கு பூச்சி மருந்து இலவசமாக தெளிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை. ஆனல், பூச்சி மருந்துகள் தற்போது 15 சதவிகித மான்ய விலையில் விற்கப்படுகின்றன.

திரு. ந. நாச்சியப்பன் : நம்முடைய விவசாயிகளில் ஒரு ஏக்கர், அரை ஏக்கரில் நெல் சாகுபடி செய்கிறவர்கள் நிறைய பேர் இருக்கிறபடியால் அனைவரும் ஒரே நேரத்தில் பூச்சி மருந்து தெளிக்காத நிலையில் ஒருவர் பூச்சி மருந்து தெளித்து பக்கத்தில் இருப்பவர் மருந்து தெளிக்காமல் இருந்தால் பூச்சிகள் அழிக்கப்படுவதில்லை. இதை உத்தேசித்து அரசே இந்தப் பொறுப்பை ஏற்று மருந்து தெளிக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போதே விமானம் மூலமாக மருந்து தெளிக்கப்படுகிறது என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

சிங்காநல்லூரிலுள்ள தொழிலாளர் குடியிருப்புகள்

*336 வினு—**திரு. ஏ. சுப்பிரமணியம்** : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூரில் அரசுதனி பெற்ற குடியிருப்புக் காலனியில் வசிக்கும் தொழிலாளர்கள், குடியிருப்புகளை குறிப்பிட்ட காலத்திற்குப் பின் தற்போதுள்ள அனுபோகதார்களுக்குக் கொடுத்து விடுமாறு கோரிய விண்ணப்பம் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) தொழிலாளர் துறை ஆணையர் 5—8—1970-ல் கோயம்புத்தூர் தொழிலாளர் நல அமைப்புச் சங்கச் செயளாலரிடமிருந்து மனு ஒன்றை பெற்றதாக கூறியுள்ளார். மனுவில் உள்ள கோரிக்கையை தொழிலாளர் துறை ஆணையருடனும், வீட்டு வசதி வாரியத் தலைவருடனும் கலந்தாலோசித்து ஒரு பொதுக்கொள்கையாக (General Policy) கருதி முடிவெடுக்க அரசு பரிசீலனை செய்துவருகிறது.

திரு. சு. துரைசாமி : வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக இப்போது இந்த வீடுகள் கட்டி தொழிலாளர்களுக்கு விடப்பட்டு வாடகை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் 20 வருஷ காலத்தில் வாடகையோடு கொஞ்சம் சேர்த்துக் கட்டி அதை அவர்களுக்கே கிரயம் செய்து கொடுக்கும் வகையில் திட்டம் கொண்டு வரப்படுமா ?